தினகரன்
ஒரு புதிய அனுபவம்

# சங்கரா பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப கருத்தரங்கம்




சங்கரா பல்கலை கருத்தரங்கில் விழா மலரை துணைவேந்தர் விஷ்ணுபோத்தி வெளியிட்டார். அருகில், பதிவாளர் சீனிவாசு, பொறியியல் தொழில்நுட்ப துறை டீன் ஸ்ரீராம்.

**காஞ்சிபுரம், மார்ச் 23:** காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை சார்பில் 14வது தேசிய தொழில்நுட்ப கருத்தரங்கம், பல்கலை வளாகத்தில் நடைபெற்றது. பல்கலை துணைவேந்தர் விஷ்ணுபோத்தி, பொறியியல் தொழில்நுட்ப துறை டீன் ஸ்ரீராம் ஆகியோர் தலைமை வகித்தனர்.

கணினி அறிவியல் மற்றும் பயன்பாட்டுத்துறை தலைவர் ஜெயலட்சுமி குத்துவிளக்கேற்றி கருத்தரங்கை தொடங்கி வைத்தார். கணினி அறிவியல் துறை தலைவர் வசந்தகுமார் மேத்தா வரவேற்றார். ஐசிடி அகாடமியின் கல்விப்பிரிவு துணை தலைவர் அன்புத்தம்பி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார்.

கருத்தரங்கில், தொழில்நுட்பம் மற்றும் பொது அறிவு போட்டிகள் நடைபெற்றன. பல்வேறு கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

நிறைவு விழாவில் பல்கலை பதிவாளர் ஜி.சீனிவாசு கலந்துகொண்டு மாணவர்களை பாராட்டி பேசினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் செந்தில்குமரன் நன்றி கூறினார்.